REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 பெப்ரவரி 6 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 32 | February 06,Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

கொரோனா வைரஸ் தொற்று;

## நோயாளர் எண்ணிக்கை 67,115 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 67 ஆயிரத்து 115 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் பல்வேறு வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவந்த 894 வைரஸ் தொற்று 06



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'நீர்ப்பாசன சுபீட்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 5,000 கிராமப்பு வடிக்கை நேற்று ஆரம்பமானது. அனுராதபுரம், பலுகஸ்வெவ, மஹமிகஹஸ்வெள பகுதியில் ஜனா ஆரம்பமானது. இதன்போது ஜனாதிபதியால் இத் திட்டத்திற்கான நினைவுப்படிகம் திறந்து வைக்கப்ப

5,000 குளங்களை புனரமைக்கும் அரசின் 'நீர்ப்பாசன சுபீட்சம்'

## தெற்காசியாவின் அதி நீளமான சுரங்கவழி நீர்ப்பாசனத் திட்டம் நேற்று ஆரம்பம்

ஜனாதிபதி கோட்டாபயவினால் உத்தியோகபூர்வமாக தொடக்கி வைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தெற்காசியாவிலேயே அதிக நீளம் கொண்ட சுரங்க வழி நீர்ப்பாசனத் திட்டம் நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுராதபுரம் பலுகஸ்வெவ பகுதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

5,000 குளங்கள் புனரமைப்பு செய்யும் 'நீர்ப்பாசன சுபீட்சம்' வேலைத் திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாண பாரிய வாய்க்கால் நிர்மாணத் திட்டத்தின் முதலாவது கட்டமாக 28 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மேற்படி சுரங்க வழி நீர்ப்பாசன வாய்க்காலுக்கான நிர்மாணப்பணிகள் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்டத்தின் ...தித்திட் ...திட்டம் 06






## ரூ.1,000 சம்பளம் கோரி

இ.தொ.... பகிஷ்கரிப்பு வெற்றி

# முடங்கியது மலையகம்

**ஹற்றன் சுழற்சி, ஹற்றன் விசேட, தலவாக்கலை குறூப் நிருபர்கள்**

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாட் சம்பளத்தை 1,000 ரூபாவாக வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தி பெருந்தோட்ட கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நேற்று (05) முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்பு மற்றும் பொதுப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை எந்தவோர் அசம்பாவிதங்களுமின்றி நாடு முழுவதும் அமைதியாக நடைபெற்றது.

இந்த முடக்கத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தாலும் இம் முடக்கத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க காங்கிரஸ் அனைத்து தரப்பினர்களிடத்திலும் பொதுவான ஆதரவை வழங்கக் கோரி பொது அழைப்பும் விடுத்திருந்தது.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டபோதிலும் இது தோட்ட தொழிலாளர்களுக்கு முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கை என்பதால் பலர், தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து முடக்க நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மலையக பிரதேசங்களில் 95% விகிதமானோர் கடையடைப்பு மற்றும் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

நுவரெலியா மாவட்டம் இந்த



முடக்க நடவடிக்கையால் ஸ்தம்பிதமடைந்துள்ளது. அதேநேரத்தில் ஆசிரியர் சங்கங்கள் இம் முடக்கத்திற்கு வலு சேர்த்திருக்கும் நிலையில் தமிழ், சிங்கள பாடசாலைகளும் முடக்கத்திற்கு 06

மக்களின் ஒற்றுமையின் பலம் நிரூபிப்பு

## திங்கள் பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவு கிடைக்கும்

ஜீவன் தொண்டமான் நம்பிக்கை

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

"முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது. அடையாள வேலை நிறுத்த போராட்டம் மூலம் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் சம்பள உயர்வு 06



**பாராளுமன்ற ஆசன விடயம்;**

## ரஞ்சனுக்கு தற்காலிக நிவாரணம் கிடைத்தது



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற ஆசனம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதை தவிர்க்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் 06

ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடு;

## இலங்கைக்கு எதிரான யோசனை தொடர்பில் நட்பு நாடுகளுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்தல்



தூதுவர்களை அழைத்து உண்மைநிலை எடுத்துரைப்பு – தினேஷ் குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள யோசனைகள் தொடர்பில் உறுப்பு நாடுகளை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

அதற்கிணங்க உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு அது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன 06

## யாழ். பல்கலை விவசாய பீட ஆராய்ச்சி பயிற்சி கட்டடம் திறப்பு



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

ஜப்பான் அரசின் நிதியுதவியில் யாழ். ... sugiyama, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சின் செயலாளர்

## மேல் மாகாணத்தில் இன்றும் நாளையும் விசேட சோதனை

எழுமாறான அன்டிஜன் பரிசோதனைகள்



வார இறுதி தினத்தை முன்னிட்டு இன்றும், நாளையும் மேல் மாகாணத்தில் விசேட சோதனை நட

## ரவி, அலோசியஸுக்கு நீதிமன்றம் பிணை வழங்கல்



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்ப்பச்சுவல் ட்ர ... தொடர்பாக அவர்கள் மீது குற்றப் பத்திரம், நீதிமன்றத்தில் தாக்கல்